# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 20/2024** **Date:13.11.2025**

**(PW2)- ஜான் எட்வர்ட்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு எந்த ஊர் என்றால் நெய்யூர் ஆகும். வழக்கு சொத்திலிருந்து நான் எவ்வளவு துாரத்தில் வசித்து வருகிறேன் என்றால் 100 அடி துாரத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் நெய்யூரில் அமைந்துள்ளது. இந்த வழக்கின் வாதியை தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் வாதி யார் என்றால் நான் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை எந்த வழக்கறிஞரை வைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 1973 , 1974 வருடத்திலிருந்து தெரியும்.

2. பிரதிவாதிகளின் மூதாதையரை தெரியுமா என்றால் ஜூலிஸ் என்பவரின் அம்மா , அப்பாவை மட்டும் தெரியும். இந்நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்க யார் என்னை அழைத்து வந்தார்கள் என்றால் எட்வின் என்பவர் அழைத்து வந்தார். மேற்படி எட்வின் என்பவர் யார் என்றால் வழி பிரச்சனையிலுள்ள நபர் ஆவார். நான் இந்நீதிமன்றத்திற்கு யார் கூறி எதற்காக வந்துள்ளேன் என்றால் தாக்கல் செய்ததால் வந்துள்ளேன்.(சாட்சி முன்னுக்கு பின் முரணாக சற்றும் சம்பந்தமில்லாத பதில்களை தெரிவிக்கிறார் )

3. இந்த வழக்கின் பிரதிவாதிகள் எத்தனை பேர் என்றால் 4 நபர்கள் ஆகும், ஜூலியஸ் உட்பட 3 நபர்கள் ஆகும். நான் காலையில் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் செல்லவில்லை. மேற்படி எட்வின் என்ன கூறி இந்நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சர்வே எண் 236/15 ல் என்னுடைய இடத்திற்கு பாதை செல்கிறது, அந்த விவரத்தை கூற அழைத்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது முகவரியாக பெரிய பள்ளி ஊரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பெரிய பள்ளி ஊர் திங்கள் நகரில் அமைந்துள்ளது என்றால் சரிதான், நான் நெய்யூரில் குடியிருந்து வருகிறேன். தற்போது நெய்யூரில் குடியிருந்து வருகிறேன் என்ற விவரத்தை என்னுடைய நீருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி எனது ஆதார் முகவரி என்றால் சரிதான். நான் நெய்யூரில் குடியிருந்து வருவதை காட்ட எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். இந்த வழக்கு பொது நல வழக்கு அல்ல என்றால் சரியல்ல. இது பொது நல வழக்கு என்று வாதி என்னிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். அரசு நாளிதழில் விளம்பரம் கொடுத்த விவரத்தை வாதி என்னிடம் கூறினாரா என்றால் அரசு நாளிதழில் விளம்பரம் கொடுக்கவில்லை. இந்த வழக்கு பொது நல வழக்கு அல்ல என்றால் சரிதான்.

5. என்னுடைய சொத்தின் சர்வே எண் 236/15 என்றால் சரிதான். மேற்படி சொத்து வீட்டு மனை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள கருங்கல் பிரதான சாலைக்கு பால்தெரு வழியாக சுலபமாக நடந்து வரலாம் என்றால் சரிதான். மேற்படி பாதையின் இருபுறமும் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி பால்தெருவை தான் வாதி பயன்படுத்தி அவரது சொத்தை அடைகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 236/7, 236/8, 236/9 ஆகும்.

6. மேற்படி பிரதிவாதிகளின் சொத்தின் கிழக்கு பக்கம் வழியாக கருங்கல் பிரதான சாலையை அடைய வேண்டுமென்றால் மேல் பால்தெரு வழியாக செல்வது போல் சுலபமாக செல்ல முடியாது என்றாலும் சுற்றி தான் செல்ல வேண்டும் என்றாலும் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் கிழக்கு பக்கம் 4 அடி தண்ணீர் போக கூடிய இடைவெளி என்றால் சரிதான். மேற்படி இடைவெளியில் எனது வீட்டு மனையிலிருந்து சுமார் 10 அடி சரிவாக உள்ளது என்றால் சரிதான் . எனது ப்ளாட் மற்றும வாதியின் ப்ளாட்டில் உற்பத்தியாகும் மழை தண்ணீர் மேற்படி இடைவெளி வழியாக செல்லும் என்றால் சரிதான்.

7.நான் பிரதிவாதிகளின் பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி இடைவெளி அவர்கள் மூதாதையர்கள் பிரதிவாதிகளின் பயன்பாட்டிற்காக அவர்களது சொத்தை சுலபமாக பயன்படுத்துவதற்கு விடப்பட்ட இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் மறுத்துரைத்து என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தயார் செய்யும்போது வாதி உடன் இருந்தாரா என்றால் இல்லை.

8. நான் மேற்படி இடைவெளியை 10 மீட்டர் அகலத்தில் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள பொது பாதை என்று எந்த ஆவணத்தில் பார்த்தேன் என்றால் புதிய சர்வே வரைபடத்தில் பார்த்தேன். மேற்படி புதிய சர்வே வரைபடத்தில் பார்த்த விவரத்தை நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லையென்றால் அது பற்றி தெரியவில்லை. அவ்வாறு ஒரு ரீ சர்வே வரைபடம் இல்லையென்ற காரணத்தினால் நான் அது பற்றி நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லையென்றால் சரியல்ல.

9. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடைவெளியை 40 வருடங்களாக பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய மனைவியின் ஆவணத்தை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 2022 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனவே நான் 2022 லிருந்து தான் மேற்படி பாதையை பயன்படுத்தி வந்திருப்பேன் என்றால் சரிதான். எனது சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்துகளை கண்டங்களாக பிரித்து layout போட்டுள்ளார்கள் என்றால் சரிதான், பிரேம் மற்றும் பெயர் தெரியாத 5 முதல் 6 நபர்கள் ப்ளாட் போட்டுள்ளார்கள்.

10 . மேற்படி நபர்கள் அவர்களது மனையை விற்பதற்கு மேற்படி மனையின் மேற்கு பக்கம் ஒரு பாதையை வலுக்கட்டாயமாக ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு ஏற்படுத்தும் போது பாதை ஏற்படுத்தப்பட்ட சொத்தின் உரிமையாளர் அதை தடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை வாதி தனது சாட்சியத்தில் ஒப்பு கொண்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி நான் குறிப்பிடும் பிரேம் மற்றும் பெயர் தெரியாத 5 முதல் 6 நபர்கள் மற்றும் வாதிகளின் கையாள் என்றாலும் அவர்களுக்காக அவர்கள் சொல்வது போல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. தற்போது ஒரு சொத்தை மனைகளாக விற்பனை செய்வதில் நிறைய வருமானம் ஈட்டலாம் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பாதையாக குறிப்பிடும் இடைவெளியில் சாலை அமைக்க வேண்டி பஞ்சாயத்தில் மனு கொடுக்கப்பட்டு அது பட்டா பூமி என்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை யாரும் கூடுதல் அகலப்படுத்தவோ, பொது உரிமை கோரவோ முடியாது என்றால் சரியல்ல,அனைவரும் பயன்படுத்தலாம் . நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் உண்மைக்கு புறம்பான

சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் பிரதிவாதிகளுக்கெதிராக பாதை உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் பாதையை அடைத்துள்ளது சம்பந்தமாக கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அரசு வேலையில் வெளியூரில் வசித்து வரும் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் கெட்ட எண்ணத்திலும் அவர்களுக்கு தொந்தரவு தர வேண்டும் என்ற எண்ணத்திலும் Real Estate ல் அதிக வருமானம் ஈட்ட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. Real Estate செய்பவர்கள் இடத்திற்கு தனியாக பாதை உள்ளது என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார். அவ்வாறு பாதை இருந்திருந்தால் நான் நிரூபண வாக்குமூலத்தில், வாதி அவரது வழக்குரையில் குறிப்பிட்டிருப்பார் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாடசியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து குண்டர்களை வைத்து பிரதிவாதிகளுக்கு தொந்தரவு கொடுத்தோம் என்றால் சரியல்ல.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்